## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண். 32/2014</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஜனவரி மாதம் **19**-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 19.01.2024**

**பெயர் - பழநி**

**த/பெ - சாமிநாதன்**

**சாட்சி -** PW1

**விசாரணை தொடங்கும் நேரம்- 12.23. பி.எம்.**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>-**

2.(7). 26.06.1926 தேதியிட்ட கிரயப்பத்திரம் ஆவண எண் 1178/1926 என சார்பதிவாளர் பொன்னேரி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் அசல். **(மேற்படி அசல் ஆவணம் லேமினேட் செய்யப்பட்டுள்ளதால் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு அதற்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). (வா.சா.ஆ 7)** எனவும்.

(8). 27.11.1987 தேதியிட்ட பழநி மற்றும் கிருஷ்ணமூர்த்தி மற்றும் சாரதாம்மாள் பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா, பட்டா எண் 520 அசல் **(வா.சா.ஆ 8)** எனவும்.

(9). நான் மற்றும் எனது தயார் சாரதாம்மாள் மற்றும் சகோதரர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முதலமைச்சர் தனிபிரிவிற்கு கொடுத்த 05.03.1992 தேதியிட்ட மனுவின் கைநகல் மற்றும் அதற்குண்டான அஞ்சல் ஒப்புகை அட்டகைளின் நகல்கள் **(வா.சா.ஆ9)** எனவும்.

(10). 16.03.2012 தேதியிட்ட கணினிவழி பட்டா, பட்டா எண் 520 அசல் **(வா.சா.ஆ 10)** எனவும்.

(11). 05.02.1968 தேதியிட்ட உயில் சாசனம் பதிவு எண் 4 III/1968 என சார்பதிவாளர் திருவள்ளூர் அலுவகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **(வா.சா.ஆ 11)** எனவும் **(மேற்படி ஆவணததின் உண்மை தன்மை குறித்து பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு அதற்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

**(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம்- 12.50 .பி.எம்.**